தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-3-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மை அறிவியல் நிலையங்களுக்கான செயல்திட்டப் பணிமனை**

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் உள்ள 30 வேளாண்மை அறிவியல் நிலையங்களின் 2018-19 க்கான செயல்திட்ட வரைவு பணிமனை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இன்று (26.03.2018) துவக்கப்பெற்று நாளை (27.03.2018) முடிவுறும். துவக்க உரையாற்றிய முனைவர் H. பிலிப், விரிவாக்கக் கல்வி இயக்குநர், வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்துர் அவர்கள் உழவர்களின் தேவை சார்ந்த திட்ட வகுத்தலின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

இயக்குநர், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகம் - வேளாண்மை தொழில்நுட்ப செயல்பாடு ஆராய்ச்சி நிலையம், ஹைதரபாத் அவர்கள் வேளாண்மை அறிவியல் நிலையங்களின் முக்கிய குறிக்கோள்கள் சார்ந்த திட்ட வகுத்தல் மற்றும் சிறப்புத் திட்டங்களின் உழவர்களுக்கான பயன்பாடு குறித்து தலைமையுரை ஆற்றினார். 15 வேளாண்மை அறிவியல் நிலையங்களிலிருந்து 85 வேளாண்மை விஞ்ஞானிகள் இப்பணிமனையில் கலந்து கொண்டு தங்களது செயல்திட்டங்களை விளக்கினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்